# Salve Regina

SOCIETY OF ST. PIUS X

ஜனவரி 2008

மலர்: 3 இதழ்: 1

(தனிச்சுற்றுக்கு மட்டும்)




"பின்பு அவர் அவர்களோடுகூடப் புறப்பட்டு, நசரேத் ஊருக்கு வந்து, அவர்களுக்கு கீழ்ப்படிந்து... சர்வேசுரனுக்கும், மனிதருக்கும் முன்பாக ஞானத்திலும், பிராயத்திலும் வரப்பிரசாதத்திலும் வளர்ந்துகொண்டு வந்தார்." லூக். (2:51,52)

# உங்களுடைய இருதயங்களை மேலே எழுப்புங்கள் !

சேசு கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

நமக்கு தெரிந்தவர் யாராவது திருயாத்திரையாகச் சென்றாலோ அல்லது ஒரு நல்ல குருவானவரையோ, கன்னியாஸ்திரியையோ அல்லது ஒரு பக்தியுள்ள விசுவாசியையோ சந்தித்தால் அவர்களிடம் நாம் மறக்காமல் கேட்பது – அவர்களுடைய **ஜெபத்தையே**! இப்படிப்பட்ட விண்ணப்பத்தின் நோக்கம் என்னவென்று ஆராய்வோமானால், பெரும்பாலும் தங்களது பிரச்சினைகள் தீரவேண்டும், பணக்கஷ்டம் நீங்கவேண்டும், தாங்கள் விரும்புவது கிடைக்கவேண்டும் என்பதாகவே இருக்கிறது. அது மட்டுமல்லாது, நமது மன்றாட்டும்கூட இவைகளைச் சார்ந்தே இருக்கிறது. ஆனால் இதுவே ஜெபமல்ல என்பதும், இத்தகைய வேண்டுதல்கள் ஜெபத்தின் **ஒரு பகுதி மட்டுமே** என்பதை பலர் அறிவது கிடையாது!

ஜெபம் என்பதற்கு பொதுவான அர்த்தம் அர்ச். தமாசின் அருளப்பர் கூறுவதுபோல, "**சர்வேசுரனை நோக்கி நமது ஆத்துமத்தை எழுப்புதலாகும்**". "ஆனால் சர்வேசுரனிடமிருந்து நன்மைகளைக் கேட்பது" என்பது அதில் – ஜெபத்தின் ஒரு பகுதி என்பதை நாம் அறியவேண்டும். சர்வேசுரனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வைத்துப் பார்த்தால், ஜெபம் என்பது சர்வேசுரனுடன் செய்யப்படும் மிக அந்நியோன்னியமான உரையாடல் ஆகும். மேற்கூறிய அனைத்து வியாக்கியானங்களையும் ஒன்றாக இணைத்துச் சொன்னால், "ஜெபமானது , சர்வேசுரனுக்கு நமது சங்கை மரியாதையை செலுத்துவதற்கும் நாம் அவருடைய மகிமைக்காக பரிசுத்ததனத்தில் வளருவதற்குத் தேவையான உதவிகளை கேட்பதற்காகவுமே நமது ஆத்துமத்தை சர்வேசுரன்பால் எழுப்புவது ஆகும்". "ஆத்துமத்தை எழுப்புதல்" என்ற சொல் நாம் இவ்வுலக வஸ்துகளையும், தன்னலத்தையும் விட்டுப்பிரிந்து விலகி நம்முடைய சிந்தனைகள் அனைத்தையும் சர்வேசுரன்பேரில் வைக்க முயற்சி எடுக்கவேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஆகவே, 'ஜெபம்' என்று சொல்லும்போது, அது சர்வேசுரனிடம் நாம் கேட்கும் வெறும் விண்ணப்பங்கள் மட்டுமே அல்ல. ஆனால் அதில் தேவ ஆராதனையும், நன்றியறிதலும், பாவ பரிகார முயற்சியும் இருக்கவேண்டும். இதனைத்தான் திவ்விய பலிபூசை யிலும் காண்கிறோம். அதனால்தான் திவ்விய பலிபூசையை ஜெபங்களில் எல்லாம் உத்தமமான ஜெபம் என்கிறோம். இப்படிப்பட்ட உத்தம ஜெபத்திற்கு – திவ்விய பலிபூசைக்கு நவீனர்கள் செய்து வருகின்ற கேடுகளைத்தான் அதிமேற்றிராணியார் மார்சல் லெஃபவர் ஆண்டகை கண்டிக்கிறார். விசுவாசிகள் இதை அறிந்து கொள்ளும் படியாகவேதான் அவருடைய கருத்தை (குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்! ) நாம் இப்பத்திரிகையில் கொடுத்து வருகிறோம்.

ஒருபக்கம் ஜெபங்களை, பூசையை மாற்றுகிறார்களென்றால், மறுபக்கத்தில பழைய பாரம்பரிய ஜெபங்கள் மறக்கடிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, திரிகால மணி அடிப்பது இப்பொழுது அரிதாகிவிட்டது. மணி அடிக்கப்பட்டாலும் சிறிது மௌனம் காத்து அந்த ஜெபத்தை சொல்வது என்பது அரிதாகி வருகிறது. இதனை நினைவில்கொண்டு , மறுபடியும் கத்தோலிக்க ஜெபமுறை, கத். பழக்கவழக்கங்கள், கத். கலாச்சாரம் நம்மிடையே மீண்டும் தழைத்தோங்க நாம் முயற்சி எடுப்போமாக.

இவ்வருடம் தபசுக்காலம் மிகச் சீக்கிரமே வருகிறது. ஏற்கனவே முன் தவக்காலத்தில் நாம் அடியெடுத்து வைத்திருக்கிறோம். திருச்சபையின் தேவ ஆராதனை கால பிரிவுகளை இன்றும் விவரமாக அறிந்துகொள்வதற்கு உதவியாக, அதற்கான விளக்கத்தை இவ்விதழில் வெளியிடுகிறோம். இது தொடர்ந்து ஒரு சில மாதங்கள் 'தொடராக' வரும்.

அதோடு சில அத்தியாவசியமான அல்லது முக்கியமான புத்தகங்களை தமிழ் மொழியில் அச்சிடும் திட்டத்திற்கு நீங்கள் உதவக்கூடும்; எப்படியென்றால், உங்களுக்கு தமிழில் 'டைப்பிங்' (Typing) தெரிந்து இருந்தால் கணிப்பொறியை (Computer) நன்கு பயன்படுத்த தெரிந்திருந்து அதை கைவசம் வைத்திருந்தால் நீங்கள் '*Salve Regina*' ஆசிரியரைத் தொடர்பு கொண்டு உதவுங்கள்.

அவ்வப்போது நேயர்களிடமிருந்து வரும் கடிதங்களின் கருத்துக்களை மனதில்கொண்டு முடிந்த அளவு அவைகளை நடைமுறையில் செயல்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. உங்களின் கருத்துக்களை தொடர்ந்து எழுதி வாருங்கள். மேலும் ஏற்கெனவே பல வாசகர்கள் செய்து வருவது போல, நீங்களும் இப்பத்திரிகையை உங்கள் உறவினர், நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி, நன்கொடைகளையும் சிறிது கொடுத்து உதவுங்கள்.

நேயர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களையும், ஆசீரையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**

**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**

**பாளையங்கோட்டை**

"**என்னைப்பொருத்தமட்டில் இதயத்தை உயரே மேலே எழுப்புவது, மோட்சத்தை நோக்கி கண்களைத் திருப்புவது; துன்பக்காலத்திலும் இன்பக் காலத்திலும் சிநேகத்தையும் நன்றியையும் எடுத்துக் கூறும் குரலது**" – குழந்தை சேசுவின் தெரசம்மாள்

# திரிகால ஜெபம்!

## "Angelus Domini nuntiavit Mariae..."

### "ஆண்டவருடைய சம்மனசு மரியாயுடனே விசேஷஞ் சொல்லிற்று..."

தேவமாதா மனுக்குலத்தின் இரட்சகரின் தாயாக தேர்ந்தெடுக்கப்பட்ட மங்கள செய்தியை கபிரியேல் சம்மனசானவர், அவர்களுக்கு அறிவித்த அந்த கணம் . . . வேளை மனித வரலாற்றிலே மிக முக்கியமான நேரமாகும். தேவதாயின் "Fiat" - "ஆம்"– அப்படியே ஆகட்டும் என்ற வார்த்தையினால் சர்வேசுரனின் மெசியாவைப்பற்றிய வாக்குறுதி நிறைவேற இருந்தது; மோட்ச வாசல் மீண்டும் திறக்கப்பட இருந்தது! பரிசுத்த கன்னிமரியாயை இந்த உந்நதமான நேரத்தில் மகிமைப்படுத்தும் விதமாக நாம் "Angelus" என்ற திரிகால ஜெபத்தை காலை, மதியம் மற்றும் மாலை என மூன்று வேளைகளில் ஜெபிக்கின்றோம்.



கபிரியேல் சம்மனசு, தேவமாதாவுக்குச் சொன்ன மங்களம், அதற்கு தேவமாதா அளித்த பதில், கிறீஸ்து நாதரின் பிறப்பு ஆகிய இம்மூன்றும் அடங்கிய வாக்கியங் களுக்கிடையே ஒரு "அருள் நிறை" மந்திரத்தைச் சொல்லி, பின்பு "Alma Redemptoris Mater" என்ற மாதா கீதத்தின் முடிவு ஜெபத்துடன் நிறைவுறுகிறது திரிகால ஜெபம்.

சாதாரணமாக முழந்தால்படியிட்டு சொல்லப்படும் இச்செபம், சனிக்கிழமை மாலையும், ஞாயிறன்றும் நின்றுகொண்டும், "Et verbum caro factum est... வார்த்தையானது மாம்சமாகி..." என்ற வாக்கியத்தின் போது ஒற்றை முழந்தாளிட்டு சொல்ல வேண்டும்.

அச்சமயத்தில் தேவாலய மணியானது, 3 முறை அடித்த பின்பு, சிறிது இடைவெளி விட்டு மொத்தம் 9 முறை அதாவது 3 மும்முறை அடிக்கப்படும். மேலே சொல்லப் பட்ட மூன்று வாக்கியங்கள், ஒவ்வொரு மூன்று மணி சப்தம் கேட்கும் போதும் ஒன்று ஒன்றாகச் சொல்லி இடையில் "அருள் நிறை..." மந்திரத்தைச் சொல்ல வேண்டும். பாஸ்கு காலத்திலோ, இச்செபத்திற்குப் பதிலாக "Regina Coeli... பரலோகத்துக்கு இராக்கினியே மனங்களிகூரும். . ." என்ற ஜெபத்தை நின்று கொண்டு சொல்ல வேண்டும்.

இச்செபம் கி.பி. 900–ம் ஆண்டுகளில் துறவற மடங்களில் பழக்கத்திற்கு வந்து, பல மாற்றங்களைக் கண்டு, இன்று நாம் ஜெபிக்கும் இந்த வடிவத்திற்கு 1560–ம் ஆண்டில் வந்தது.

### வரலாறு!


பக்தியோடு திரிகால ஜெபம் செய்வது எவ்வளவு பயனுள்ளது, தீமைகளிலிருந்து நம்மைக் காக்கிறது என்பதை விளக்கும் ஒரு கதை "ஞானோபதேச பொக்கிஷக் கதைகள்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2–வது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த போது, ஜெர்மானியர்கள் ஊடுருவியிருந்த பெல்ஜியம் நாட்டின் வைய்மெஸ் என்ற நகரை குண்டுகள் வீசி தாக்குமாறு ஒரு அமெரிக்கப் படை அதிகாரி அனுப்பப்பட்டார். அதனை நிறைவேற்ற அவர் முனையும் போது, அந்த நகரிலிருந்து திரிகால ஜெபத்திற்கான மணியோசையைக் கேட்டார். பக்தியுள்ள கத்தோலிக்கரான அவர் குண்டு போடுவதை நிறுத்தி, திரிகால ஜெபத்தை பக்தியோடு சொல்லலானார். அப்போது, அவரது மனதில் நாஸ்தீக நாஸிக்கள் அந்நகரில் இருந்தால் எப்படி இத்தகைய ஜெபத்திற்கான மணியடிக்க விட்டிருப்பார்கள்? எனவே அவர்கள் அந்நகரை விட்டு வெளியேறி விட்டார்கள். பகைவர்கள் வெளியேறிவிட்ட நகரில் குண்டு போடுவது எவ்வளவு மடத்தனம் என்ற நினைவு மனதில் திடீரெனத் தோன்ற குண்டு போடாமல் சென்றார். ஆனால் அந்த மணி இறந்தவரைப் புதைக்கும் வெட்டியான் அடித்த துக்கமணி என்பதையும், ஜெர்மானியர் அதன் பின்னரே நகரைவிட்டு வெளியேறினர் என்பதையும் அவர் அறியவில்லை! எப்படியோ அன்று அந்நகர் குண்டு வீச்சிலிருந்து தப்பியது!

எனவே சாத்தானை வெற்றி கொண்ட இரட்சகரின் திருப்பிறப்பையும், அவரது மீட்பின் இரகசியங்களையும், தேவமாதாவின் அன்பையும் நமக்கு நினைவூட்டும் திரிகால ஜெபத்தை பக்தியுடன் சொல்வோமாக. குடும்பத்தில் பிள்ளைகளுக்கும் கற்றுத்தந்து ஜெபிக்கத் தூண்டுவோமாக!

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

**- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -**

**(1905 -1991)**



(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர் களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – **ஆசிரியர்**)

## (3)

## திவ்விய பலிபூசைக்கு அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்!

சில கத்தோலிக்கச் செய்தி இதழ்களில் வெளியிடப்பட்ட, பூசை செய்வது போன்ற சில புகைப்படங்களைக் காணும்போது அவை, பூசையில் எந்த நேரத்தில் எடுக்கப்பட்டவை என்பதைக்கூட அறிய இயலாதவையாக இருக்கின்றன. ஒரு படத்தில் சாதாரண, பீடத்துணி எதுவும் விரிக்கப்படாத மர மேஜையின் பின்னால் பொதுநிலையினரின் உடையை அணிந்துகொண்டு ஒருவர் இரசப்பாத்திரத்தையும், மற்றவர் நற்கருணை நிறைந்த பாத்திரத்தையும் உயர்த்திய வண்ணம் இருக்கிறார்கள். அப்புகைப்படத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வாக்கியங்கள் அவர்கள் குருக்கள் என்று எனக்கு தெரிய வந்தது. இக்குருக்களின் பக்கவாட்டில் இரு பெண்கள் அரைக்கால் சட்டையும், மேலாடையையும் அணிந்து நிற்க; மறுபக்கத்தில் வெறும் ஸ்வெட்டர் சட்டை அணிந்திருக்கும் இரண்டு பையன்கள் நிற்கிறார்கள். அங்கே ஒரு பக்கவாட்டில் சிறு நாற்காலியில் ஒரு இசைக்கருவி (Guitar) சாய்த்து வைக்கப்பட்டுள்ளது.

மற்றொரு புகைப்படத்தில் இளைஞர் நற்பணி மன்றத்தின் பிரதான அறையின் ஓரத்தில் ஒரு நீண்ட உடுப்பை மட்டும் அணிந்தவராக குரு, ஒரு நாற்காலிக்கருகே நிற்கிறார். அதன் இருமூலைகளிலும் இரண்டு எரியும் மெழுகுதிரிகளும், மத்தியில் மண்ணாலான பெரிய கோப்பையும், ஒரு சிறு கோப்பையும் வைக்கப்பட்டிருக்கின்றன. 5 இளைஞர்கள் கீழே தரையில் கால்களை மடக்கியவாறு அமர்ந்திருக்க அவர்களில் ஒருவன் வாத்தியக்கருவி (Guitar) யை இசைக்கிறான்!

இதுபோன்ற துர்மாதிரிகையான புகைப்படங்களிலிருந்து வெளிப்படும் ஒரு பொதுவான உண்மை எதுவென்றால் பூசையானது, ஒரு சாதாரணமான செயலாக, ஏதோ தெருக்களில் நடக்கும் காரியமாக, அலட்சியமான உடைகளை உடுத்திக்கொண்டும், அன்றாடம் வீட்டில் பயன்படுத்தப்படும் பாத்திரங்களைப் பயன் படுத்தியும் செய்யப்படுகிறது என்பதே! இப்பொழுது பங்கு ஆலய கடைகளில் விற்கப்படும் கத்தோலிக்கப் பத்திரிகைகள் என்று அழைக்கப்படுபவை கூட, இந்த அவசங்கையான புகைப்படங்களை குறை கூறி கண்டனம் செய்வதை விட்டுவிட்டு, அவைகளை ஆதரித்து, சிபாரிசு செய்பவையாகத்தான் உள்ளன. இதுமட்டு மல்லாமல், சில பத்திரிகைகள் இதைக்குறித்து வரும் வாசகர்களின் அதிநவீன கருத்துக்களையும் வெளியிடுகின்றன! அவற்றில் ஒன்று இப்படிக் கூறுகிறது: "திருவழிபாட்டு மாற்றங்கள் இன்னும் அதிகம் வேண்டும்... தேவையேயில்லாமல் வார்த்தைகளை அதே வடிவில் மீண்டும், மீண்டும் சொல்வது நமது கற்பனை சக்தியை தடுக்கிறது...". அதோடுகூட, பூசை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு மற்றொரு நவீன வாசகரின் கருத்து பின்வருமாறு உள்ளது: "நமக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன்; அவை நாளுக்கு நாள் அதிகரித்தும் வருகின்றன. ஆனாலும் திருச்சபை இவைகளை விட்டு தூர ஒதுங்கியே இருக்கிறது. பெரும்பாலான நேரங்களில், பூசை முடிந்த பிற்பாடு களைப்பாகத்தான் வெளியே வருகிறோம். ஞாயிற்றுக் கிழமை பூசையில் கூறப்படும் பிரசங்கக் கருத்துகளுக்கும் அன்றாட வாழ்விற்குமிடையே பெரிய இடைவெளி இருக்கிறது".

இது ஏன்? மனிதனை, அவனுடைய ஆத்துமத்தை சர்வேசுரன்பால் உயர்த்தாமல், சாதாரண மனித நிலைக்கும் கீழாகத் தன்னைக் கொண்டுச்செல்லும் 'பூசையைக்' காண்பவர்கள், நிச்சயம் களைப்பாகத்தான் வெளியே வருவார்கள்! இம்மாதிரியான பூசைகள் மனிதனை தன்னுடைய பிரச்சினைகளை விட்டு மேலே எழும்ப விடாது ! பரிசுத்தமானவைகளை வேண்டுமென்றே அழிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தரப்படுகின்றன. கத்தோலிக்கன் தனக்குத் தேவையான, தான் ஆவலுடன் தேடும் ஒன்றை இழந்து போனதாகத் தவிக்கின்றான். ஏனெனில் மனிதன் தன் சுபாவ இயல்பிலேயே சர்வேசுரனுக்கடுத்தவைகளை சங்கை மரியாதையோடு கையாளவே ஈர்க்கப்படுகின்றான். திவ்விய பலிபூசை மெய்யாகவே ஒரு பரிசுத்த மான கைங்கரியமாக இருப்பதால் அதனை சங்கையோடு கையாள

விரும்புகிறான். ஆனால் அதற்கு மாறாக நடப்பதைக் கண்டு திகைக்கின்றான். அதனால் உள்ளத்தில் வெறுமையை உணர்கின்றான். குறிப்பாக பூசையில் ஆண்டவருடைய திரு சரீரமாகவும் திரு இரத்தமாகவும் மாறவுள்ள பூசைப்பலி பொருட்கள் விசயத்தில் எந்த அளவுக்கு சிலர் நடந்து கொள்கிறார்கள் என்றால், பூசையில் பயன்படுத்தப்படும் மாசு மருவற்ற வெண்மையான கோதுமை அப்பங்களுக்குப் (ஓஸ்தி) பதிலாக சாதாரண பழுப்பு நிறமான வைகள் பயன்படுத்தப்படுகின்றன. இது ஏன்? புதுப்பூசையில் அகற்றப்பட்டுவிட்ட "hanc immaculatam hostiam... மாசு மருவற்றதும் தூயதுமான அப்பத்தை ..." என்ற பாரம்பரிய, அப்பத்தை ஒப்புக்கொடுக்கும் ஜெபத்தை நாம் மறக்கவேண்டும் என்ற அவர்களின் முயற்சியாலேதான் !

இதைவிட இன்னும் பயங்கரமான காரியங்கள் நடந்து வருகின்றன. சில வேளைகளில் புளிக்காத கோதுமை அப்பத்திற்குப் பதிலாக, சாதாரண கோதுமையால் செய்யப்பட்ட "ரொட்டி"யைப் பயன்படுத்துகிறார்கள். (நம் நாட்டில் இந்திய கலாச்சாரம் என்ற போர்வையில் அரிசியிலிருந்து உருவாக்கப்பட்ட அப்பம் மற்றும் பலகாரங்களைப் பயன்படுத்தி திவ்விய பூசையை செல்லாததாகவும், அவசங்கைப்படுத்தியும் தேவதுரோகம் செய்யப்படுவதை நாம் அறிவோம் – ஆசிரியர்.) இதனால் கோதுமை அப்பங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் "Inaestimabile Donum" என்ற பாப்பானவரின் அறிக்கை புறக்கணிக்கப்படுகிறது. இதைவிட கொடுமை என்னவென்றால், அமெரிக்காவில் முட்டை, பால், தேன், வெண்ணெய் போன்றவைகள் சேர்த்து தயாரிக்கப்பட்ட 'கேக்'களை ஒரு ஆயரே பூசைக்கு பயன்படுத்தும்படி சிபாரிசு செய்திருக்கிறார் !

இத்தகைய அவசங்கை குருக்கள், கன்னியர்கள் மத்தியிலும் செய்யப்படுகிறது. இன்று குருத்துவ துறவற ஆடைகள் – உடுப்புகள் மறைந்து போய் விட்டன. தேவ ஊழியர்கள் இன்று, மதசார்பற்ற கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கத்தோலிக்க மதத்தின் அடையாளங்கள் எதுவுமின்றி வாழ்கின்றார்கள். மேல்நாடுகளில் கன்னியர்கள் தங்கள் மடங்களை விட்டு வெளியேறி அடுக்குமாடிக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் வசிக்கின்றனர் !!

திருவழிபாட்டிலும், தேவ ஊழியர் மட்டிலும் நடக்கும் அவசங்கைகளை பட்டியலிடுவது எனது நோக்கமில்லை. மாறாக, எவ்வாறு இன்று கத்தோலிக்கர்கள் குழப்பமடைந்து, துர்மாதிரிகைகளை நோக்கியுள்ளார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே மேற்கூறிய நிகழ்ச்சிகளைக் கூறினேன். ஆனாலும் நான் புதிதாக ஒன்றையும் சொல்லவில்லை. ஏற்கனவே இம்மாதிரியான துர்மாதிரிகை, அவசங்கைகள், தேவதுரோகச் செயல்கள் தொலைக்காட்சி மூலமாகவும், பத்திரிகைகள் வாயிலாகவும் மக்கள் அறிந்தவைகளே !

இன்று தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலமானது, திருவழிபாட்டில் செய்யப்படும் அவசங்கைகள் மூலமாகவும் கொடூர 'ராக்' (Rock) இசை அபத்தங்களாலும் அவசங்கை செய்யப்படுகிறது. இவை குருக்கள், மேற்றிராணிமார்களின் முழு ஒத்துழைப்புடனே நிகழ்கின்றது என்பது வேதனைக்குரியது. இந்த அவசங்கைகளுக்கெல்லாம் பரிகாரம் செய்பவர்கள் இந்தக் குருக்களோ அல்லது ஆயர்களோ அல்ல; மாறாக இக்காரியங்களால் துர்மாதிரிகையும், அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ள சில பிரமாணிக்கமான விசுவாசிகள்தான்.

இப்படிப்பட்ட அவசங்கையான காரியங்களை ஊக்குவிக்கும் மேற்றிராணிமார்களும் குருக்களும் எப்படி தேவ கோபாக்கினியை தங்கள் மீதும், தங்களுடைய விசுவாசிகள் மீதும் இறங்காமல் தடுக்க முடியும்? இந்த தேவ கோபாக்கினியை அவர்களது நற்கனி கொடாத கனியற்ற உழைப்பில் காணமுடிகிறது. அவர்களது உழைப்பு வீணாகிறது. ஏனென்றால் இப்படி அவசங்கையாக நிறைவேற்றப்படும் பூசைகள் வரப்பிரசாதங்களையும், தேவ ஆசீர்வாதங்களையும் கொண்டுவருவதில்லை. மாறாக தேவ தண்டனையையே கொண்டு வருகின்றன.

தேவநற்கருணைக்குச் செய்யப்படும் நிந்தை அலட்சியமானது புதிய நவீன முற்போக்கு சிந்தனையின் – மனப்பான்மையின் பகிரங்க வெளிப்பாடாக இருக்கின்றன. திவ்விய நற்கருணையைப் பற்றி பேசுகையில் திரிதெந்தீன் பொதுச் சங்கம், "**நமதாண்டவர் வசீகரிக்கப்பட்ட அப்பத்தின் சிறு துகள் – பாகத்தில் முதலாய் மெய்யாகவே இருக்கிறார்**" என்று போதிக்கின்றது. கையில் திவ்விய நன்மை வாங்குவதைப்பற்றி என்னதான் சொல்வது? நாவிலே நற்கருணை வழங்கப்படும் போதுகூட, சில சிறு துகள்கள் விழுந்து இருப்பதை நாம் பார்க்கலாம். இது இவ்வாறு இருக்க, நற்கருணையை கையில் வழங்கும் போது, அதை வாங்குபவரின் கையில் ஒட்டிக்கொண்டிருக்கும் சிறு துகள்கள் என்னாகிறது? இந்த அலட்சிய போக்கினால் அநேகருடைய, குறிப்பாக சிறுவர்களுடைய விசுவாசம் தளர்ந்து போகின்றது. விசுவாசிகள் பூசைக்கு வருவது வெறும் அன்பின் அப்பத்தைப் பகிர்வதற்காகவென்றால், அல்லது ஒரு சமூக விருந்தை அருந்துவதற்காகவென்றால் சிறு அப்பத் துகள்களைக் குறித்து அதிகக் கவனமோ, கவலையோபடத் தேவையில்லை. அதுபோல நற்கருணை பழைய நிகழ்வைக் குறிக்கும் வெறும் நினைவின் அடையாளமாக – நம் ஆண்டவரின் ஞான பிரசன்னத்தை மட்டும் கொண்டிருந்தால் கீழே விழும் சிறு துகள்கள்பற்றி கவலைப்படாதிருப்பது முற்றிலும் சரியென்றுகூடக் கூறலாம். ஆனால் தேவநற்கருணை, மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனிதனுமானவரான நமதாண்டவரின் மெய்யான பிரசன்னத்தைக் கொண்டிருக்கும் போது, இப்பேர்ப்பட்ட அலட்சியப் போக்குகளையும், அவசங்கை, அவமரியாதைப் பழக்கங்களையும் எப்படி அனுமதிக்கவோ, ஊக்கப்படுத்தவோ முடியும் ! ஆக, இது பதிதர்களின் போக்கு ! இப்பதிதக் கொள்கையினால் பீடிக்கப்படாத கத்தோலிக்கர்கள் இதை எதிர்த்து பொங்கி எழுகின்றனர்.

கிறீஸ்துநாதர் சுவாமியை தேவநற்கருணை வழியாக நாம் உட்கொள்ளும் போது, மேலான சங்கை மரியாதை செய்யாமல் எப்படி நம்மால் இருக்க முடியும்? அர்ச். சின்னப்பர், "வானத்திலும், வானத்தின் கீழாகவும் அனைத்து முழங்காலும் மண்டியிடக்கடவது!" (பிலிப். 2:10) என்றல்லவா கூறினார். பொதுவாக எந்த நவீன குருவும் திவ்விய நற்கருணைக்கு முன்பாக மண்டியிடுவதில்லை. புதுப்பூசையும் இதையே ஊக்கப்படுத்துகிறது. இதற்கு இரண்டு காரணங்களை மட்டுமே என்னால் கூறமுடியும். ஒன்றில் மனிதனுடைய அகங்காரமானது அவனை சர்வேசுரனுக்கு நிகரானவனாகக் கருதச்செய்து இவ்வாறு நடக்க வைக்கிறது, அல்லது சர்வேசுரன் மெய்யாகவே இத் தேவதிரவிய அனுமானத்தில் இல்லை என்பதில் அவனை நிச்சயமடையச் செய்து இவ்வாறு நடக்கச் செய்கிறது !

(தொடரும்)

# ஆங்கில வேதசாட்சிகளின் இறப்பின் போது நிகழ்ந்த சுபாவத்துக்கு மேலான நிகழ்வுகள்!

(இங்கிலாந்து நாட்டில் 8–ம் ஹென்றியால் மூட்டப்பட்டு, 1577 முதல் 1681–ம் ஆண்டு வரை நடைபெற்ற வேதகலாபனையில் 200–க்கும் மேற்பட்ட கத்தோலிக்க விசுவாசிகள் வேதசாட்சியமடைந்தார்கள். அவர்களது கொடூரமான வேதசாட்சிய மரணத்தின் போது அசாதாரணமான சுபாவத்துக்கு மேலான சம்பவங்கள் நிகழ்ந்தன. அவை அவர்களுக்குத் திடத்தையும், விசுவாச உறுதியையும், சுற்றியிருந்த பதிதர்களுக்கு, ஏன் கொலையாளிகளுக்கும் கூட சத்திய விசுவாச ஒளி கிடைக்கக் காரணமாக அமைந்தது. டிசம்பர் 2007 என்ற பத்திரிகையில் வந்த இந்த கட்டுரையிலிருந்து சில பகுதி இங்கே தரப்படுகிறது. அவை நமக்கும் விசுவாச உறுதி தருபவையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை – ஆசிரியர்)

## அர்ச். அலெக்ஸாண்டர் பிரையண்ட்

கத்தோலிக்க விசுவாசத்தை கைவிட மறுத்ததால் கொலைத் தீர்ப்பு பெற்ற இவர், வதைக்கும் கருவியில் இரண்டு நாட்கள் வைக்கப்பட்டிருந்தார். அப்போது அவர் மிகுந்த புத்துணர்ச்சி கொண்டவராகக் காணப்பட்டார். மரணத்திற்கு முன்பாக விட்டுச்சென்ற குறிப்பில் "நான் சுபாவத்துக்கு மேலான ஒரு இனிமையான உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு, நிரப்பப்பட்டேன். சேசுவின் மகா பரிசுத்த நாமத்தையும், பரிசுத்த கன்னிமரியாயையும் ஜெபமாலையில் அழைத்ததாலும் எனது மனம் உற்சாகத்துடனும் தேற்றப்பட்ட நிலையிலும் இருந்தது. எந்த வகையான சித்திரவதைகளையும் ஏற்கும் மனப்பான்மையால் நிறைந்திருந்தேன். . . " என்று எழுதியிருந்தார்.



அதோடு வாதிப்பவர்கள் இன்னும் கொடூர உபாதைகளைத் தந்தபோதும் அவர் எந்தவிதமான வலியின் வேதனையையும் அனுபவிக்கவில்லை. தனது குறிப்பில் தொடர்ந்து: "எனது கரங்களும், கால்களும் கொடுமையாக விரிக்கப்பட்டு கொடூர கருவியில் மாட்டப்பட்டு வதைக்கப்பட்ட போதிலும் நான் இதய அமைதியையும், உற்சாகத்தையும் உணர்ந்தேன். வலியின் துயரம் எனக்கில்லை... " என்று குறிப்பிட்டுள்ளார். இப்படியாக கொடூரமான துன்பத்திலிருந்து புதுமையான முறையில் பாதுகாக்கப்பட்டாலும், 1581, டிசம்பர் 1–ம் நாளன்று தூக்கிலிடப்பட்டு வேதசாட்சியமடைந்தார். அப்போது அவருக்கு வயது 28 !

## முத். நிக்கோலஸ் ஹார்னர்

வயது முதிர்ந்த தையல்காரரான நிக்கோலஸ் ஹார்னர் கத்தோலிக்கக் குருக்களுக்கு உதவி செய்து அவர்களைக் காப்பாற்றிய குற்றத்திற்காக ?!, மரண தண்டனை தீர்ப்புப் பெற்றார். அவரும் தமது வேதசாட்சித்தின் போது, பரலோக பாதுகாவலையும், ஆறுதலையும் பெற்று இன்முகத்துடன் வேதசாட்சிய முடி பெற்றார். அது எவ்வாறெனில், முதலில் அசுத்தங்கள் நிரம்பிய கிடங்கில் போடப்பட்டு, அவரது ஒரு கால் மரத்து செயலிழந்து போகும் நிலையை அடைந்திருந்தது. அப்போது அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரு காட்சியைக் கண்டார். ஆம்! அவரது தலைக்குமேல் ஒரு அழகிய **கிரீடம்** தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் காட்சி அவரது ஆன்மாவை பரலோக இனிமையாலும், வேதனையற்ற உணர்வைத் தந்தது! வேதனையின் சுவடே இல்லாமல் அவரது முகம் மலர்ந்திருந்தது. தூக்கிலிடப்படுவதற்கு முன்பாக முழந்தாழிட்டு ஜெபித்தார். அப்போதும் தமது தலைக்கு மேலே "பிரகாசமான கிரீடம்" காணப்படுவதைக் கண்டு உற்சாகமடைந்து பெருமகிழ்வோடு கொலைப் பீடத்தில் ஏறினார். தாம் காணும் இந்த அற்புதக் காட்சியை அருகில் நின்றிருந்த தமது நண்பரிடம் வெளிப்படுத்தினார். கொலைத் தண்டனை நிறைவேறும் போது மக்கள் சுற்றியிருக்க அனுமதிக்கப்படுவது வழக்கம். ஹார்னர் தூக்கிலிடப்பட்டு அடக்கம் செய்யப்பட்டபின் அந்த நண்பர் இதனை பின்னாளில் வேதசாட்சியான அர்ச். ராபர்ட் சவுத்வெல் என்பவரிடம் கூறினார். ஹார்னர் 1590, மார்ச் 4–ம் நாளன்று வேதசாட்சியமடைந்தார்.

இன்னும் அநேக சம்பவங்கள் நிகழ்ந்தன. இவ்வாறாக சர்வேசுரன் தமது திருச்சபைக்காகவும், கத்தோலிக்க விசுவாசத்திற்காகவும் தங்கள் இன்னுயிரை துறக்க முன்வரும் வேதசாட்சிகளை பரலோக ஆறுதல்களாலும், அசாதாரண நிகழ்வுகளாலும் நிரப்பி, வேதசாட்சிய முடியை அக்களிப்புடன் ஏற்றுக்கொள்ளத் தூண்டினார்.

"தன் ஜீவனை நேசிக்கிறவன் அதை இழந்து போவான். இவ்வுலகத்திலே தன் ஜீவனை பகைக்கிறவனோ சததமான ஜீவியத்துக்கு அதைக் காப்பாற்றிக் கொள்ளுகிறான்" (அரு. 12:25)

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை அறிந்து கொள்வோம்!



[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

## பூசை ஆரம்பம் (தொடர்ச்சி)

### சம்மனசுக்களின் கீதம் - (Gloria)

– வியாக்கியானம் –

சர்வேசுரனை வாழ்த்தும் புனிதமான ஆர்வத்தினுடைய **"மகிமை கீதம்"** (Gloria) தாழ்மையான மன்றாட்டினுடைய ஆழ்ந்த ஜெபமாக மாறுகிறது. அது இப்போது சம்மனசுக்களின் குரலொலியில் பெரும் சப்தமான **"In terra pax hominibus bonae voluntatis" - நல்ல மனதுள்ள மனிதர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக..."** என்ற வார்த்தையாக ஒலிக்கின்றது.




சர்வேசுரனுடனான சமாதானமும், ஒப்புரவும் முன்னிட்டியிலுள்ள தேவ குழந்தையிடமிருந்தே மனுக்குலம் பெற்றுக் கொண்டது. அவரே தமது கொடிய சிலுவை மரணத்தால் மோட்சத்திற்கும், பூலோகத்திற்குமிடையே சமாதானத்தையும், ஒப்புரவையும் நிறுவினார் (கொரி. 1:20). ஆகையால் மகிழ்ச்சி பொங்க ஒலிக்கும் **மகிமை கீதத்தின்** சப்தத்தின் மத்தியில் திருச்சபை, நமது பாவ நிலையையும், நமது வறுமையையும் – ஒன்றுமில்லாத் தன்மையையும் நினைவுபடுத்தியதோடு, உலகிற்குச் சமாதானத்தை கொண்டுவந்த நமதாண்டவரிடம் நம்மை, நமது துயரங்களிலிருந்து விடுவிக்கும்படி, தாழ்மையாக விண்ணப்பிக்கும்படி தூண்டி, மன்றாடுகிறது. ஏனெனில் அவர் நமது விண்ணப்பத்தின் சப்தத்துக்குச் செவிமடுக்கவும், நமது ஜெபத்தைக் கேட்கவும் நியாயமான அநேக காரணங்கள் இருக்கின்றன (சங். 129:2) என்று நமக்கு நம்பிக்கையூட்டுகிறது.

**"Domine Fili unigenite, Jesu Christe: Domine Deus, Agnus Dei Filius Patris... - ஏக குமாரனாய் பிறந்த சுதனாகிய ஆண்டவரே, சேசு கிறீஸ்துவே, தேவனாகிய ஆண்டவரே, சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையே, பிதாவின் குமாரனே."** இவ்வாறு அழைப்பதன் மூலம் திருச்சபை தமது மோட்ச உன்னதரும், மணாளனுமானவரை ஏற்றிப் போற்றுகின்றது; அவரது தெய்வீகத்தையும், அனைத்து சிருஷ்டிகளுக்கும் மேலான அவரது வல்லமையையும், உயர்வையும் போற்றுகிறது. சர்வேசுரனின் ஒரே பேறான அவரை போற்றிப் புகழ்கின்றது. அவரே பிதாவினால் அனைத்து காலங்களுக்கும் முன்பாக – விடியற் காலத்தின் நட்சத்திரத்திற்கு முன்பாகவே ஜென்மிக்கப்பட்டார் (சங். 109:3); அவரிடமே நித்தியத்திற்கும் சர்வேசுரன் பூரண பிரியமாயிருக்கிறார் (மத். 17:5); அவரையே, சர்வேசுரனுடைய மகிமைக்காகவும், உலக இரட்சண்யத்திற்காகவும் தெய்வீகப் பலி பொருளாக ஒப்புக்கொடுக்கிறது திருச்சபை! அவருடைய **"சேசு** (= இரட்சகர், மீட்பர்) – **கிறீஸ்து"** (= அபிஷேகம் செய்யப்பட்டவர், அதாவது மிக உயர்ந்த தீர்க்கத்தரிசியாகவும், குருவானவராகவும் அரசராகவும் (பிலிப். 2:10) இருப்பவர்) என்ற நாமத்திலேயே அவரது அனைத்து தெய்வீக – மானிட நிறைவையும், சலுகை வரங்களையும் இணைக்கிறது திருச்சபை!

**"Qui tollis peccata mundi, miserere nobis - உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே எங்கள் பேரில் இரக்கமாயிரும்."** முடிவில்லாத வகையில் ஊழியுள்ள காலம் வரைக்கும் உலகத்தைப் பீடித்து சர்வேசுரனின் நீதியான தண்டனையைக் கேட்டும், அனைத்துப் பாவங்களையும் போக்குவதற்காகவும், பரிகரிப்பதற்காகவும் கிறீஸ்துவானவர் தமது விலை

மதிப்பில்லா இரத்தத்தை கடைசி துளி முதலாய் சிந்திப் பாடுபட்டார். தேவ குமாரன், இரக்கத்தின் இருப்பிடமாகத் திகழும் மெய்யான மனித இருதயத்தைக் கொண்டுள்ளார். அது நமது பலவீனத்தின் பேரிலும், குற்றங் குறைகள் மீது இரக்கத்தையும், பரிதாபத்தையும் காட்டும் படியாக ஈட்டியால் தன்னையே குத்தித் திறக்கப்பட அனுமதித்தது !

**"Qui tollis peccata mundi, Suscipe deprecationem nostram - உலகத்தின் பாவங்களைப் போக்குகிறவரே எங்கள் மன்றாட்டை ஏற்றுக்கொள்ளும்."** நம்மை எல்லையற்ற விதமாக நேசித்து, நம்முடைய பாவங்களை அவருடைய திரு இரத்தத்தால் (காட்சி. 1:5) தூய்மைப்படுத்தி போக்கும் நமது தெய்வீக இரட்சகரின் அருள் சுரக்கும் அன்பு, இரக்கத்தால் பெரிதும் வயப்பட்ட திருச்சபை பக்தி பெருக்கத்தால் முந்தைய அதே வாக்கியத்தை மீண்டும் உச்சரித்து அவரைப் போற்றுகின்றது. பரம பிதாவின் சினம் அகற்றும் பலியாக தன்னையே அவர் அர்ப்பணித்ததால் அவரே, "தமக்குப் பயப் படுகிறவர்களுடைய மனதின்படி அருளிச் செய்து, அவர்க ளுடைய மன்றாட்டைக் கேட்டு, அவர்களை இரட்சிப்பார்" (சங். 144:19).

**"Qui Sedes ad dexteram Patris, miserere nobis - பிதாவின் வலப்பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்கள் பேரில் இரக்கமாயிரும்."** மோட்சத்தில் பரிசுத்தத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து இராச்சியப்பாரம் செய்கிறார் கிறீஸ்து. அதாவது, அவரது மனுஷீகத்தையும் மிஞ்சிய அந்தஸ்தின் உயர்வில் அனைத்து சிருஷ்டிகளிலும் வல்லமையிலும், அளவற்ற வரப்பிரசாத நிறைவிலும் அவரே விஞ்சி இருக்கிறார்; அவரே முழுமை யான அளவில் சர்வேசுரனின் வல்லமையையும், மகிமையையும், அதிகாரத்தையும் கொண்டுள்ளார். அவரது மேலான மோட்ச மகிமையின் உயர்வில் அவர் நமது அனைத்து வல்லமையுள்ள மத்தியஸ்தராக, பிதாவிடம் பரிந்து பேசுகிறவராக மட்டுமல்லாமல், அவர் நமது மிகவும் இரக்கமுள்ள சர்வேசுரனாகவும், எஜமானராகவும் இருக்கிறார். அவரே தமது தெய்வீக வல்லமையாலும், கிருபையாலும் நம்மை மன்னிக்க எப்போதும் தயாராக இருக்கிறார். அவரே, நமது ஒவ்வொரு தேவையில் சகாயம் புரிபவராகவும், நமது ஒவ்வொரு ஆபத்திலும் நமக்கு உதவ தயாராக இருப்பவராகவும் இருக்கிறார்.

சம்மனசுக்களின் கீதமாகிய – மகிமையின் கீதத்தின் (Gloria) துவக்கத்தில் நாம் ஆண்டவராகிய சர்வேசுரனுக்கு நமது சங்கையையும், நன்றியையும் சமர்ப்பிக்கின்றோம்; அதோடு நமக்காக மரித்து, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, சர்வேசுர னுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமது நிலையான தேவைகளில் கருத்தாயிருந்து நமக்காக பிதாவை மன்றாடிக் கொண்டிருக்கும் சேசு கிறீஸ்துநாதரை நாம் பக்தியோடு பணிந்து மன்றாடி விண்ணப்பிக்கிறோம் (ரோமர். 8:34). இந்த இரக்கத் தைக் கேட்டும, அனுசரணையான மன்றாட்டின் குரல் இறுதியில் மகிழ்ச்சி நிறைந்த தொனியாக மாற்றப்படுகிறது; ஆம்! மகிமையின் கீதம் (Gloria) இப்போது மூவொரு தேவனின் ஆழ்ந்த பக்தி நிறைந்த புகழ்ச்சியின் முழக்கமாக எழும்புகிறது !

**"Quoniam tu solus, sanctus, tu solus Dominus, tu solus Altissimus, Jesu Christe, cum sancto Spiritu in gloria Dei Patris - Amen - ஏனெனில் நீர் ஒருவர் மாத்திரமே பரிசுத்தர், நீர் ஒருவர் மாத்திரமே ஆண்டவர், நீர் ஒருவர் மாத்திரமே உன்னதமானவர். சேசு கிறீஸ்துவே இஸ்பிரீத்துசாந்துவோடு பிதாவாகிய சர்வேசுரனின் மகிமை யில் (வீற்றிருக்கிறார்) ஆமென்."** மிகுந்த ஆர்வமாய் சேசு கிறீஸ்து நமக்காகவும், நமது இரட்சண்யத்திற்காகவும் தன்னையே தாழ்த்தி, உருமாற்றியதால், நாம் இந்த வார்த்தைகளை பாடி மிகுந்த மகிழ்ச்சி யோடு, அவரது வல்லமையையும், உயர்வையும் தெய்வீகத்தையும் ஏற்றுக்கொண்டு புகழ்கின்றோம். உண்மைத் தேவனை குறிப்பிட "அனைத்தும் **பரிசுத்தர்**" அவரே "**ஆண்டவர்**" நீர் ஒருவரே "**உன்னதமானவர்**" (சங். 82:15) என்று அடைமொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சேசு கிறீஸ்து ஒருவரே முடிவில்லாத வகையில் "பரிசுத்தராக" இருக்கிறார். ஆகவேதான் அவரே அனைத்து சிருஷ்டிக்கப்பட்ட பரிசுத்ததனத்திற்கெல்லாம் மூலமாகவும், வடிவ மாகவும் திகழ்கின்றார். அவரது மனுஷீகமும் கூட அனைத்து வரப்பிரசாதத்தினுடையவும், புண்ணியத்தினுடையவும் பொக்கிஷ மாகத் திகழ்கின்றது. அவரே "ஆண்டவராக" இருக்கிறார். ஏனெனில் சேசு கிறீஸ்து இப்பிரபஞ்சத்தின், அளவற்ற விதமாக அனைத்திற்கும் உரிமையாளராகவும், அதிகாரியாகவும், நீதிபரராகவும் திகழ்கின்றார். இதையே தான் அர்ச். சின்னப்பர், அவரே "நித்திய ஆனந்தரும், ஏக வல்லவரும், இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தருமா யிருக்கிறவர்" (1 தீமோ. 6:15) என்று குறிப்பிடுகிறார். ஆகையால் அவர் ஒருவருக்கே அனைத்து சிருஷ்டிகளும் பணிந்து, சங்கித்து, ஊழியம் செய்ய வேண்டியது.

அவர் "**உன்னதமானவர்**". ஏனெனில், அவரது தெய்வீக உயர்வு, மகிமையினால் அவர் சகல படைக்கப் பட்டவைகளிலும் மிகவும் உயர்ந்து விஞ்சியிருக்கிறார். அவரது பரிசுத்த மனுஷீகம் அனைத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டது, மகிமைப்படுத்தப்பட்டது. எவ்வாறெனில் சர்வேசுரன் அவரை மரணத்திலிருந்து உயிர்ப்பித்து, மோட்சத்தில் தமது வலது பக்கத்தில் அமர்த்தி அரசுகளுக்கும், வல்லமைக்கும், பெருமைகளிலும் உயர்வை வழங்கி, இவ்வுலகில் மட்டுமல்லாது, வரப்போகும் உலகிலும் துலங்கும் வண்ணம் மேலான நாமத்தை வழங்கினார்.

ஆகையால் தான் புகழ்ச்சியின் மகிமை கீதம் (Gloria) மோட்சத்தில் மூவொரு தேவனின் மகிமையாகவும், மகிழ்ச்சி புகழ்ச்சியாகவும் திகழ்கின்றது. இக்கீதத்தால் நாம் மகிழ்ச்சியடை கிறோம். ஏனெனில் தேவசுதனாகிய சர்வேசுரன், பரிசுத்த ஆவியானவரையும், அதே மகிமையோடு பிதாவையும் நித்தியத்தி லிருந்தே கொண்டிருக்கிறார். ஆகையால் தான் "ஆண்டவராகிய சேசு கிறீஸ்துநாதர் பிதாவாகிய சர்வேசுரனின் மகிமையில் வீற்றி ருக்கிறார் என்று எல்லா நாவும் அறிக்கையிடவும் பண்ணினார்" (பிலிப். 2:11).

(தொடரும்)

**திவ்விய பலிபூசை காண்பதினால் நமது கஷ்டங்கள் யாவும் குறைவதுமல்லாமல், அவைகளை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வதற்கு அவசியமான வரப்பிரசாதங்களையும் ஏராளமாய் அடைந்து கொள்கிறோம்** – ஞானோபதேச கோர்வை

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (7) பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

தேவதாய் பழுதற்ற கன்னிகையாக இருக்கிறார்கள். "பழுதற்றவள்" என்றால் குற்றமில்லாதவள், எந்தவிதமான குறையுமில்லாதவள், களங்கம் கூறமுடியாதவள், யாராலும் தாக்கப்படாதவள் என்று பொருள். அதிலும் "பழுதற்ற கன்னிகை" என்றால் நிறை கற்புடையவள், பழுதற்ற கன்னிமையுடையவள், மிகத் தூய்மையான கற்பொழுக்கமுள்ளவள் என்று அர்த்தம் கொள்ளலாம். மகா பரிசுத்த மரியாய் பழுதற்ற, கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவாக இருக்கிறார்கள். இதனால் தான் திருச்சபை கன்னியர்களுக்குள்ளே உத்தம அர்ச்சிஷ்ட கன்னிகையே என்றும், மகா பரிசுத்த மாதாவே, அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே என்றெல்லாம் அழைத்து அவர்களது தெய்வீகக் குமாரனின் பிறப்பிற்கு முன்னும், பிறப்பின் போதும், பிறப்பிற்கு பிறகும் கன்னிமை குன்றாத மலராக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட "கன்னிமரியாயே, கன்னிமைக்கும் **பழுதின்றி** இரட்சகருடைய தாயாக ஏற்பட்டீரே ! நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்; வணக்கத்துக்குரியவள்..." (படிக்கீதம் – மாதா பேரால் பூசை) என்று வாழ்த்தி அவர்களை "பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே" என்று அழைத்து மகிழ்கின்றது.



### பாவ மாசேதுமில்லா தாய் !

திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே கிறீஸ்தவர்கள் பரிசுத்த மரியம்மாளுக்கு உயர்வான இடத்தை வழங்கி வந்தார்கள். அவர்களிடம் பாவ மாசு இருந்தது என்ற எண்ணமே தேவதூஷணமாக கருதி வந்தார்கள். அதனால் தான் அர்ச். அகுஸ்தினார், நாம் பாவங்களில் உழன்று கொண்டிருக்யையில் மகா பரிசுத்த கன்னிமரியாயைப் பொறுத்தவரையில் எந்த எதிர் வினாவையும் எழுப்ப நான் விரும்பவில்லை என்று கூறுகிறார்.

சாத்தான் மரியாயைத் தாக்க முயலும். ஆனால் அவனால் அவர்களைத் தாக்க முடியாது, அவர்களைப் பாவத்தில் விழத்தாட்ட முடியாது. ஏனெனில் அவர்கள் பழுதற்ற கன்னி மாதாவாக ஏற்படுத்தப்பட்டுள்ளார்கள்.

முதல் ஏவாளை தாக்கி பழுதடையச் செய்த சாத்தானால் 2–ம் ஏவாளாகிய பரி. கன்னிமாமரியை தாக்கி பழுதடையச் செய்ய முடியாது. ஏனெனில் ஆதியில் வெற்றி பெற்ற சாத்தான், முடிவில் தோல்வியைச் சந்திக்கிறான். எவ்வாறெனில் அவனது அந்த தோல்வி பரம பிதாவினாலே நிச்சயிக்கப்பட்டு, அவனது "தலையை நசுக்கும் ஸ்திரீயானவளின்" பழுதற்ற பரிசுத்ததனத்தின் வெற்றி முன் குறிக்கப்பட்டது. சாத்தானின் தோல்விக்கு – ஆன்ம இரட்சண்யத்திற்கு தன் குமாரனோடு இணைந்த மாமரியே பெரும் பங்கு வகிக்கிறார்கள். இப்படி வெற்றி காண்பவர்கள் எப்படி பழுதுள்ளவர்களாக இருக்க முடியும்?

முதல் ஏவாள் பழுதடைந்தாள். ஏனெனில் ஆதிசர்ப்பத்தை நம்பினாள், தவறான இடத்தில் நம்பிக்கை வைத்தாள். அதனால் கீழ்ப்படியாமையாகிய பாவத்தைக் கட்டிக்கொண்டு தானும் பழுதடைந்து, மனுக்குலத்தையும் பழுதடையச் செய்தாள். ஆனால் 2–ம் ஏவாளாகிய கன்னிமாதாவோ ஆண்டவருடைய சம்மனசானவரை நம்பினாள். சர்வேசுரனிடமிருந்து வந்த சுபசெய்தியை விசுவசித்துக் கீழ்ப்படிந்து பழுதில்லா ஜெயசீலியாக உயர்ந்தாள். அதோடு மனுக்குலத்தின் மீது விழுந்த பழுதை நீக்கினார்கள்.

இதனைப் பற்றியே அர்ச். அல்போன்ஸ் லிகோரியார், "மாதாவை முன்னிட்டு மகனோ, அல்லது மகனை முன்னிட்டு மாதாவோ – எப்படியாயினும் லூசிஃபேரை வெற்றிக்கொள்வது என்பது நிச்சயம். ஆகையால் தான் அர்ச். பெர்னார்டு 'இந்த ஆங்கார தீய ஆவியானவன் மகா பரிசுத்த கன்னிகையால் விழத்தாட்டப்பட்டு, அவர்களது பாதத்தால் மிதிக்கப்பட்டான். ஆகவே போரில் தோல்வியுற்ற அடிமை, இந்த இராக்கினியின் கட்டளைக்கு எப்போதும் கீழ்ப்படிய கட்டாயப்படுத்தப்படுவான்' என்று கூறுகிறார்" என்று உரைக்கிறார். இவ்வாறாக சாத்தான் தேவதாயின் வல்லமையால் முறியடிக்கப்பட்டிருக்க அவன் எப்படி மாதாவை பழுதடையச் செய்ய முடியும், பாவத்தில் விழத்தாட்ட முடியும்?

எனவே தான் சத்திய திருச்சபை இத்தகைய ஜெய இராக்கினியான தேவமாதாவை **பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்** என்று தாழ்ந்து பிரார்த்திக்கிறது.

# நிறைவேறிவரும் தீர்க்கத்தரிசனங்கள்

(தேவமாதா சங். மரியான்னா தாயாருக்கு நன்வெற்றி மாதாவாகக் காட்சி தந்து வழங்கியத் தீர்க்கத்தரிசனங்கள் 20-ம் நூற்றாண்டில் அப்படியே நிறைவேறி வருகின்றன. - ஆசிரியர்)

## முத். 9-ம் பத்திநாதர் பற்றிய தீர்க்கதரிசனம்

**1634**-ம் வருடம் டிசம்பர் 8-ம் தேதி, தேவமாதாவின் அமலோற்பவத் திருநாளன்று சங். மரியான்னா தாயாருக்கு மூன்று அதிதூதர்களும், அவர்களுடைய இராக்கினியான பரிசுத்த தேவதாயுடன் தோன்றினார்கள். அர்ச். கபிரியேல் அதிதூதர் திவ்விய நன்மைகள் நிரம்பியிருந்த நற்கருணைப் பாத்திரத்தை தன் கைகளில் ஏந்தியவராகக் காட்சியளித்தார். இதைப்பற்றி தேவதாய் கூறுகையில்: "இது மகா பூஜிக்கத்தக்க தேவதிரவிய அனுமானமாம் திவ்விய நற்கருணையைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏக பரிசுத்த ரோமன் கத்தோலிக்க அப்போஸ்தலிக்கத் திருச்சபையை சேர்ந்த பிரமாணிக்கமுள்ள கிறீஸ்தவர்களுக்கு, கத்தோலிக்க குருவானவர்கள் இந்த திவ்விய நற்கருணையைப் பகிர்ந்தளிப்பார்கள். பாப்பரசரே திருச்சபையின் காணக்கூடிய தலைவரும் கிறீஸ்தவ வேதத்தின் அரசருமாக விளங்குகிறார். எனது அமல உற்பவத்தை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்யும் பாப்பரசரே, 'பாப்புவின் தவறா வரத்தையும்' விசுவாச சத்தியமாகப் பிரகடனப்படுத்துவார். உலகின் ஒரு அரசனின் பொறாமையாலும், பேராசையாலும் அநீதமாக பாப்பரசருக்குச் சொந்தமான நாடுகள் (Papal States) ஆக்கிரமிக்கப்பட்டு, அந்தப் பாப்பானவர் வத்திக்கானிலேயே சிறைவைக்கப்பட்டு உபாதிக்கப்படுவார்" என்று கூறினார்கள்.



முத். 9-ம் பத்திநாதர்

தேவதாயால் இவ்வாறு தீர்க்கத்தரிசனமாக குறிப்பிடப்பட்ட இந்த பாப்பரசர் முத். 9-ம் பத்திநாதரேயாவார். அவரிடமிருந்தே 1861 மார்ச் 13-ம் நாள் பாப்பரசருக்குச் சொந்தமான நாடுகள் இத்தாலி நாட்டு மன்னரான 2-ம் விக்டர் இம்மானுவேல் என்பவரால் அபகரிக்கப்பட்டது!. முத். 9-ம் பத்திநாதர் பாப்பரசரே வத்திக்கானில் சிறைபிடிக்கப்பட்டு துன்புற்றார் என்பது வரலாறு. (காண்க: Pio Nono by E.E.Y. Hales). பரிசுத்தரான அவருக்கு முத்திப்பேறுப் பட்ட ஆய்வின் போது, 2000-ம் ஆண்டு அவரது கல்லறை திறக்கப்பட்ட போது அவருடைய சரீரம் மரித்து 100 வருடங்களுக்கும் மேலாகியும் எந்தவிதமான அழிவுமின்றி புதுமையாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது ! இப்போதும் வசீகரமான தெளிந்த முகத்தோற்றத்துடன் காணப்படும் பாப்பரசரின் அழியாத சரீரம் அவரது பரிசுத்த ஜீவியத்துக்குச் சான்றாக விளங்குகிறது !

மேலும் தேவதாய் மற்றொரு மிக முக்கியமான சுவராஸ்யமான தீர்க்கதரிசனத்தையும் கூறியுள்ளார்கள். அது என்னவெனில்: "19-ம் நூற்றாண்டில் ஒரு நல்ல உண்மையான கத்தோலிக்க ஜனாதிபதி இந்த நாட்டை ( ஈக்வடார் ) ஆள்வார். நல்லவரான அவருக்கு இந்த மடத்தை (மரியான்னா தாயாரின் மடம்) ஒட்டியுள்ள சதுக்கத்தில் நமதாண்டவரான சர்வேசுரன் வேதசாட்சிய குருத்தோலையை அளிப்பார். இக் குடியரசு நாட்டை அவர் எனது திவ்விய குமாரனுடைய திரு இருதயத்திற்கு அர்ப்பணிப்பார். இவ்வர்ப்பணத்தால், அதற்கடுத்து வரும் ஆண்டுகளில் கத்தோலிக்க வேதம் நிலைநிறுத்தப்படும். அப்பொழுது திருச்சபைக்கு மிக துரதிஷ்டமான மிகக் கடினமான வருடங்கள் வரும். இந்த வருடங்களில் தீமையின் சபையினரான சாத்தானின் இரகசிய சபையினர் நாட்டின் பொது நிர்வாகத்தை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவர். அவர்கள் எல்லா துறவற சபைகளையும் மிகக் கொடூரமாக உபாதிப்பார்கள். அவர்கள் மூர்க்கமாக இந்த எனக்குச் சொந்தமான (மரியான்னா தாயாரின் சபை) சபையையும் தாக்குவார்கள்".

இவ்வாறு மாதா கூறிய தீர்க்கதரிசனம் அப்படி நிறைவேறியது ! ஈக்வடார் நாட்டை **கபிரியேல் கார்சியா மொரேனோ** (1821 - 1875) என்ற நல்ல கத்தோலிக்க ஜனாதிபதி ஆண்டார். அவர் தமது குடியரசு நாட்டை 1873-ம் ஆண்டில் சேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணித்தார். மாதா முன்னுரைத்தது போல அவர் வேத விசுவாசத்திற்காகவும், கிறீஸ்தவ சிநேகத்திற்காகவும் வேதசாட்சிய முடியை

அடைந்தார். அவர் வேதசாட்சியம் அடைந்த போது 9-ம் பத்திநாதர் அவரைப் புகழ்ந்து பேசி அஞ்சலி செலுத்தினார். மறைந்த ஜனாதிபதி கபிரியேல் கார்சியா மொரேனோவின் **அழியாத இருதயமும்**, புகழ்பெற்ற வர்ணத்தினால் வரையப்பட்ட **குவிட்டோ மாதாவின்** படமும் குவிட்டோ மேற்றிராசன தேவாலயத்தில் இன்றும் காணலாம்.

### முடிவுரை:

நமதன்னை 16-ம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்திய தீர்க்கதரிசனங்கள் இந்த 20-ம் நூற்றாண்டில் - நமது காலத்திலேயே நம் கண்முன்னே நிறைவேறி வருவதை நாமறிவோம். இத்தீமையின் நாட்கள் குறைக்கப்பட 16-ம் நூற்றாண்டிலேயே சங். மரியான்னா தாயாரை ஜெபித்து மன்றாடும்படி நமதன்னைக் கேட்டார்கள். தேவதாயின் மக்களாகிய நாமும் இதை உணர்ந்து தீமையான இக்காலத்தில் திருச்சபையையும், ஆன்மாக்களையும் காக்கும்படி நன்வெற்றி மாதாவிடம் ஜெபிப்போம்.

சங். மரியான்னா தாயாருக்கு தேவதாய் நன்வெற்றி மாதாவாகக் காட்சி தந்து தீர்க்கதரிசனங்கள் இத்துடன் நிறைவுறுகிறது. மாதாவின் காட்சிகள் - அவர்களின் அற்புதச் சுரூபத்தின் வரலாறு பற்றிய விவரங்கள் சில மாதங்களில் நமது *Salve Regina* -வில் எதிர்பாருங்கள். அதற்காக ஜெபியுங்கள்.

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

விசுவாசிகள் பயனடையும்படியாக இங்கே பிரதான மந்திரங்களுடைய விளக்கங்கள் தரப்படுகின்றன - (ஆசிரியர்)

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**4. இஷ்டப்பிரசாதமுள்ள ஆத்துமம் செய்யும் நற்கிரியைகள் மோட்ச சம்பாவனைக்குரியது:**

இப்பேர்ப்பட்ட அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட ஆத்துமமானது, தன் புது சக்தியினால், படைக்கப்பட்ட வஸ்துக்களுக்கெட்டாத மேலான கிரியைகளைச் செய்யக்கூடியதாகிறது. இப்படிப்பட்ட நற்கிரியைகளில் ஒவ்வொன்றும் நித்திய ஜீவியத்தைப் பெற்றுத்தர தகுந்தவைகள். சுபாவத்திற்கு மேலான அந்தஸ்திலிருக்கும் ஆத்துமத்துக்கும், அதன் தத்துவங்களாகிய புத்தி மனதுக்கும் கொடுக்கப்பட்ட இந்தத் தேவ ஜீவியமானது மோட்சத்தில் சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசித்து, முடிவில்லாத பாக்கியம் அனுபவிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறது.

**5. இப்பேர்ப்பட்ட அந்தஸ்தை சர்வேசுரன் நமக்கு அறிவித்திராவிட்டால்,** மட்டுள்ள நமது புத்தியைக் கொண்டு இதை அறிந்திருக்க முடியாது. சர்வேசுரனால் அறிவிக்கப்பட்ட பிற்பாடு முதலாய், இது எப்படிப்பட்டதென்று சரிவர அறியக்கூடாதவர்களாய் இருக்கிறோம். ஆகிலும் சர்வேசுரன் இந்தப் பரம இரகசியத்தை நமக்கு தெரிவித்தபடியால் முழு நிச்சயத்தோடும் நன்றியறிதலோடும் விசுவசிக்கிறோம்.

ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகளிடத்தில் முதலாய் தேவ இஷ்டப்பிரசாதத்தால் உண்டாகிய அதிசயத்துக்குரிய மாற்றம் இதுதான்.

### II. தேவமாதாவுக்கு அளிக்கப்பட்ட இஷ்டப்பிரசாதம் சொல்லிலடங்காது

**1. அர்ச். கன்னிமரியம்மாள் உற்பவிக்கும்போது அடைந்த இஷ்டப்பிரசாதத்தின் அளவென்ன?** அர்ச். தேவமாதா, தேவனாகிய சேசு கிறீஸ்துவைத் தவிர, மற்ற சிருஷ்டிகளுக்கெல்லாம் மேலானவளாய் இருக்கிறதினிமித்தம், சர்வேசுரன் அவள்பேரில் வைத்திருக்கிற சிநேகத்தையும், அவளுக்குண்டான மகிமைப் பிரதாபத்தையும் சிறிதளவேனும் கண்டுபிடிக்க ஆசையாயிருந்தால், ஒரு காரியத்தை நாம் அறிய வேண்டும். அதாவது அந்த தேவதாய் சகல அர்ச்சிஷ்டவர்களும், சம்மனசுக்களும் கூடி அடைந்திருக்கிற தேவ இஷ்டப்பிரசாதத்தை விட, அதிகமாய் அடைந்திருந்தாள் என்பதுதான். கபிரியேல் என்கிற சம்மனசு மங்கள வாழ்த்துதலில் சொன்னது போல், அர்ச். கன்னிமரியம்மாள் தேவ இஷ்டப்பிரசாதத்தையும் சகல புண்ணியங்களையும் சம்பூரணமாய்ப் பெற்றிருந்தாள்.

**2. தேவமாதா ஜென்மப்பாவமின்றி உற்பவித்ததைப்பற்றி:** இஷ்டப்பிரசாதம் பாவ அந்தஸ்திலுள்ள ஆத்துமத்தில் இருக்கக்கூடாததினாலே, தேவமாதா மேற்சொல்லப்பட்ட உன்னத அர்ச்சிஷ்டதனத்தை அடையும்படி ஜென்மப்பாவம் இல்லாமலிருக்க வேண்டியிருந்தது. அத்தோஷம் அவளிடத்தில் ஒருபோதும் இல்லை.

(1) **ஜென்மப்பாவமாகிறதென்ன?** அர்ச். கன்னிமரியம்மாள் ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்தாளென்று சொல்லும்போது, சேசுநாதர்சுவாமியைப் போல் தகப்பனில்லாமல் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் அற்புத செயலால் உற்பவித்தாளென்று எண்ணக்கூடாது. மற்றப் பிள்ளைகள் தாய் தகப்பனிடத்தினின்று உற்பவித்துப் பிறக்கிறதுபோலவே, அவளும் அர்ச். அன்னம்மாள், அர்ச். சுவக்கீன் என்கிற தாய் தகப்பனிடமிருந்து உற்பவித்துப் பிறந்தாள். இவ்விதமாய் அவள் உற்பவித்ததினாலே, ஆதித்தகப்பனின் சந்ததியைச் சேர்ந்தவர்களுக்கு வரும் ஜென்மப்பாவத்தின் தோஷம் அவளுக்கும் வரவேண்டியிருந்தது.

(தொடரும்)

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரை ***"The Ideal of the Catholic Family"*** என்ற நூலில் வெளிவந்த ஒரு சேசுசபை குருவானவரின் பிரசங்கத்தின் தமிழாக்கம்)

## பெற்றோர்களுக்குரிய சங்கை மரியாதை!

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய மிக விலைமதிப்பில்லா கொடைகளில் ஒன்று, அவர்கள் உள்ளத்தில் பெரியவர்களுக்கு "சங்கை மரியாதை செலுத்தும்" உணர்வை ஊட்டுவதேயாகும். பெரியவர்களுக்குக் கொடுக்கக்கூடிய இம்மதிப்பு மரியாதை உலகில் குறையும் போது பாவங்கள் மலிந்து துன்பங்களும் பெருகி மரணங்கள் அதிகரிக்கும்.

மனித வாழ்வின் ஜீவியமும், சந்தோஷமும் பெரியவர்களுக்கு, பெற்றோர்களுக்கு, அர்ச்சிஷ்டவர்களுக்கு, அர்ச்சிஷ்ட பண்டங்களுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பு, சங்கை மரியாதையுடன் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய சங்கை மரியாதை என்ற புண்ணியத்தின் அடித்தளமானது குழந்தைகளின் உள்ளத்தில், அவர்கள் தங்கள் பெற்றோரை மதித்து சங்கை செய்யக் கற்றுக்கொள்ளும் போது இடப்படுகிறது. சில பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தங்களை மதித்து, மரியாதையுடன் நோக்குவதற்குத் தகுதியில்லாத ஈன வாழ்வை – துர்மாதிரிகையான வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இத்தகைய பெற்றோரின் குழந்தைகள் சங்கை மரியாதை என்ற இந்த புண்ணியத்தின் அடித்தளமின்றி வளர்ந்து, பின்னர் தெய்வ பயமின்றி மூர்க்கர்களாய் தங்கள் பாவங்களில் நிலைகொண்டு விடுகிறார்கள்.

சில சமயங்களில் பெற்றோர் நல்லவர்களாய் இருக்கும் போதிலும், தங்கள் குழந்தைகளின் மனதில் இப்புண்ணியத்தின் விதையை விதைக்கத் தவறி விடுகிறார்கள். குழந்தைகள் தங்கள் விருப்பம் போல், தங்களுக்கு பிடித்தவைகளை மட்டுமே செய்வதை அனுமதிக்கும் போதும், அல்லது தவறு செய்யும் போது கண்டித்து திருத்தாதப்போதும் குழந்தைகள் சுயநலம் மட்டுமே நிறைந்த மனதுள்ளவர்களாக வளர்கிறார்கள். அத்தகைய குழந்தைகள் உள்ளங்களில் சிறதளவும் சங்கை மரியாதை என்பதே இல்லாமல் இருக்கிறார்கள். அத்தகைய குழந்தைகள் பெரியோர்களானதும் அவர்களது வாழ்வு எப்படி கிறீஸ்தவப் பண்புள்ளளதாக இருக்கும்?

### நான்காவது கட்டளை

நம் அனைவருக்கும் தேவ கட்டளைகள் மனப்பாடமாகத் தெரியும். இதில் நான்காவது கட்டளை "பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக!" என்று கற்பிக்கிறது! இக்கட்டளை வெறும் கீழ்ப்படிதலை மட்டும் கற்பிக்கவில்லை. மாறாக அதற்கும் மேலான சங்கை மரியாதையையும் கட்டளையிடுகிறது. கீழ்ப்படிதல் அவசியம் தான். ஆனால் அதுமட்டும் போதாது. "சங்கித்திருத்தல்" என்றால் பெற்றோருக்கு பயந்து, நேசித்து, மதித்து மேலும் கீழ்ப்படிய வேண்டியதைக் குறிக்கிறது. குழந்தைகள் செய்ய வேண்டிய நல்ல காரியங்களில் பெரியோரை மதித்து சங்கை செய்வதுதான் முதலில் வருகிறது. இந்தப் புண்ணியம்தான் குழந்தைகள் பின்னர் பெரியவர்களானதும் தங்கள் வாழ்நாள் முழுவதிலும் தெய்வபயத்துடன் வாழ முதல் தயாரிப்பாகத் திகழ்கின்றது. வேதாகமத்தில் நாம் வாசிப்பது போல, நீடித்த வாழ்வை இவ்வுலகில் வாழ்வதற்கு இன்றியமையாத நிபந்தனை: பெற்றோர்களுக்கு கொடுக்க வேண்டிய சங்கை மரியாதையாகும். இதில் ஒன்றை கவனிக்க வேண்டும். இந்த நிபந்தனையை நிறைவேற்றினால் நீடித்த சந்தோஷமான வாழ்வை வாழலாம் என்று சொல்லப்படவில்லை. ஏனென்றால், சந்தோஷமான வாழ்வு வாழ்வதற்கு இன்னும் மற்ற அநேக புண்ணியங்களும் தேவைப்படுகின்றன. இதன் சரியான பொருள்: பெற்றோர்களுக்கு அடங்கி அவர்களை சங்கை செய்யாத பிள்ளைகள் மோசமான துன்பங்களுக்கு இட்டுச்செல்லும் பாதையில் – அழிவின் பாதையில் போகிறார்கள் என்பதாகும்.

### உங்கள் பிள்ளைகளுக்கு எப்படி சங்கை மரியாதை செய்வது என்று கற்றுக் கொடுங்கள்


இதைக் கற்றுக் கொடுக்காத பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு பெரும் அநீதியை செய்கிறார்கள். தங்கள் பெற்றோரை மதிக்க, சங்கை செய்து கீழ்ப்படிய கற்றுக்கொள்ளாத பிள்ளைகள் சர்வேசுரனுக்கு சங்கை செய்யக் கற்றுக்கொள்வது அரிது! இதைக் கற்றுக் கொடுப்பதற்கு குடும்ப ஜெபம் மிக உதவியாக இருக்கிறது. பெற்றோர்கள் குடும்ப ஜெபத்தை பக்தியோடு சொல்லும் போதும், பரிசுத்த காரியங்களைப் பற்றி பேசும் போதும் பரிசுத்தமான பொருட்களை கையாளும் போதும் பிள்ளைகளும் அப்படியே கீழ்ப்படிதலுடன் தங்கள் பெற்றோர் மட்டில் உயர்ந்த எண்ணமும் அதைத் தொடர்ந்து சங்கை மரியாதை செய்யும் எண்ணமும் அவர்கள் மனதில் வந்துவிடுகிறது.

எனவே கத்தோலிக்கப் பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் உத்தமர்களாக வேண்டுமானால் பெரியவர்களை, பெற்றோர்களை சங்கை மரியாதை செய்ய கற்றுக் கொடுங்கள்.

**பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு ஆண்டவரிடத்தில் கீழ்ப்படியுங்கள். இது நியாயமாமே. உன் பிதாவையும், மாதாவையும் சங்கித்திருப்பாயாக. இது நீ நன்றாய் இருப்பதற்கும், பூமியிலே நீ நீண்ட ஆயுசுள்ளவனாயிருப்பதற்கும் என்கிற வாக்குத்தத்தத்தை உடைய முதல் கற்பனையாயிருக்கின்றது.** (எபே. 6:1–3)

# தேவ ஆராதனை முறையின் காலச் சக்கரம்

நமது பரிசுத்த வேதத்தின் முக்கிய பரம இரகசியங்களையும், விசேஷமாய் நமது ஆண்டவருடைய திருச்சீவியத்தின் சம்பவங் களையும், **ஒவ்வொரு வருடமும் வரிசைக்கிரமமாக** நமக்கு ஞாபகமூட்டி, ஏக திரித்துவ கடவுளுக்கு ஞானத்திலும், உண்மையிலும், ஆராதனையும், புகழ்ச்சியும், தோத்திரமும், பரிகாரமும் செய்யும் கொண்டாட்டத்தின் வரையறை முறைக்குத் தேவ ஆராதனை முறையின் காலச் சக்கரம் எனப்பெயர்.




(குறிப்பு:
உள் வட்டமானது குருக்களின் கட்டளைஜெபத்தின் வெவ்வேறு நேரங்களைக் குறிக்கிறது.)

தேவ ஆராதனை முறையில் இரண்டு உண்மைகளை நம் கண்முன் வைத்துக்கொள்ளவேண்டும். ஒன்று: கிறீஸ்துவின் பரம இரகசியங்கள் நம்மில் நிறைவேறும் பரம இரகசியங்களேயாம்; மற்றொன்று: கிறீஸ்துவின் ஜீவியத்தை நம் ஜீவியத்தில் நடத்திக் காட்டுவதேயாம்.

**கிறீஸ்துநாதருடைய பரம இரகசியங்கள் மனுக்குலத்தின் பரம இரகசியங்கள்** ஆவது எப்படியெனில், முதலாவதாக: கிறீஸ்துநாதர் நமக்கு ஜீவியம் அளிப்பதற்காகவே இவ்வுலக ஜீவியம் ஜீவித்தார். இரண்டாவதாக: அவருடைய பரம இரகசியங்கள் நம்முடையன ஆவதற்குத் தம்மையே நம் ஜீவியத்தின் முன் மாதிரிகையாய் வைத்திருக்கிறார்; தாம் எடுத்த மனித சுபாவத்தைப் புனிதப்படுத்தி, அதனை தமது பிதாவின் வலப்பாரிசத்திற்கு எடுத்துச்சென்று, அங்கிருந்து நமக்கு வழிகாட்டியாகவும், ஞானதீபமாகவும், ஜீவிய ஊற்றாகவும் இருந்து,

நம்மைத் தம் மகிமையில் சேர்த்துக்கொள்ள அழைக்கிறார். (அரு. 14:6) ; மூன்றாவதாக: பரம பிதாவும் நம்மனைவரையும் கிறீஸ்துவின் மூலமாகத்தான் நோக்குகிறார். கிறீஸ்து மூலமாய் நம்மைத் தமக்குச் சுவீகாரப் புத்திரராக முன்னியமகம் செய்து நம்மைத் தமக்கு உகந்தவர் களாக்கினார். (எபேசி. 1: 4-6). கிறீஸ்துவுக்கும் நமக்கும் உண்டான இந்த நெருங்கிய உறவினால் கிறீஸ்துவுக்குச் சொந்தமான யாவும் நமக்கும் உரியனவாயின.

கிறீஸ்து தம் மனித அவதாரத்தினால் நம்முடைய மூத்த சகோதரனும், தம் தெய்வீக அபிஷேகத்தினால் நம்முடைய பிரதான குருவும், தம்முடைய பலியினால் நமது பலிப்பொருளும், போசனமும், பானமும் ஆகி, **நம்மைப் பிதாவுடன் சேர்க்கும் வழியுமாயிருக்கிறார்**. அவர் மனுக்குலம் முழுவதையும் தன் ஞான சரீரமாக்கிக் கொண்டார். அவர் அச்சரீரத்தின் சிரசு, நாம் உறுப்புக்கள். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களும், மாமிசத்தில் மாமிசமும், எலும்பில் எலும்புமாயிருக்கிறோம்" (எபேசி. 5:30). ஆகவே **கிறீஸ்துவின் ஜீவியத்தை நம் ஜீவியத்திலும் நடத்தவேண்டும்;** அதுவே தேவ ஆராதனை முறைக்கால அநுசரிப்பின் உட்கருத்து.

அக்காலத்தில் சேசுநாதர் தம் சீஷர்களில் தம்முடைய ஞான உருவத்தைப் பதிப்பித்து, அவர்களைப் பரிசுத்தப்படுத்தியது போல், அவரது அலுவலைத் தொடர்ந்து செய்யும் திருச்சபையும் இத்தேவ ஆராதனை முறையின் காலச் சக்கரத்தின் வழியே நம்மைக் கிறீஸ்துவிடம் அழைத்துச் சென்று, புனிதப்படுத்தி நாம் அவரோடு ஐக்கியமாகி, அவரில் ஜீவித்து அவரது தெய்வீகத்தைச் சுகித்துப்பார்க்கச் செய்கிறது.

இத்தேவ ஆராதனை முறையின் காலச்சக்கரத்தில் நட்சத்திரங்களைப்போல பரிசுத்த ஜெருசலேமில் கிறீஸ்துவைச் சுற்றி மகிமை ஆசனங்களில் அமர்ந்திருக்கும் அவரது பரிவாரக் கூட்டத்தினரான அர்ச்சிஷ்டவர்களைத் திருச்சபை மறக்கவில்லை. கிறீஸ்துநாதர் அவர்களைத் தம் மகிமையில் சேர்த்துக்கொண்டு, அவர்கள் மூலம் நமக்கும் வரப்பிரசாதங்களை அருளுகின்றார். இப்புண்ணிய ஆத்துமாக்களை நாம் கண்டுபாவித்து, அவர்களைப் போல நாமும் அழியா வரத்தைப் பெற்றுக்கொள்ளத் திருச்சபை வருஷக்கிரமத்தில் சதா நம்மைத் தூண்டி அழைக்கின்றது.

**இக்காலச்சக்கரத்தின் இரு சிகரங்கள்:** (1) கிறீஸ்துவின் பிறப்பு (2) கிறீஸ்துவின் உத்தானம். தேவ ஆராதனை முறைக்கால வரையறை முதலில் ஆகமன காலத்தின் வழியாய் ஏறிச்சென்று, **கிறீஸ்துவின் பிறப்பு** என்ற சிகரத்தை அடைந்து, மூன்று இராஜாக்கள் கிறீஸ்துவை ஆராதித்த திருநாள் என்னும் சமவெளியைக் கடந்து, அதன்பின் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் வழியாய் மீண்டு, பின்னர் தபசு காலத்தின் வழியே ஏறிச் சென்று **கிறீஸ்துவின் உத்தானம்** என்ற சிகரத்தையடைந்து, இஸ்பிரீத்துசாந்துவின் திருநாள் என்ற சமவெளியைக் கடந்து, அதன்பின் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் வழியே மீளுகிறது. இவ்வாறு இச்சக்கரங்கள் மாறி மாறி சுற்றிக்கொண்டேயிருக்கும்.

## காலச் சக்கரத்தின் முக்கிய பிரிவுகள்

பூசைப் புத்தகத்தையும் அதன் பிரிவுகளையும் நன்கு அறிய தேவ ஆராதனை முறையின் காலம் வகுக்கப்பட்டிருக்கும் விதத்தை அறிந்திருக்கவேண்டும். தேவ ஆராதனை முறையின் காலம் ஜனவரி மாதம் முதல் தேதியில் துவக்குவதில்லை; நவம்பர் மாதம் 27-ம் தேதிக்கும் டிசம்பர் மாதம் 3-ம் தேதிக்கும் இடையே வரும் ஞாயிற்றுக்கிழமை (ஆகமன காலத்தின் முதல் ஞாயிறு) யிலிருந்துதான் தொடங்குகிறது; இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்குப்பின் 24-ம் ஞாயிறுக்குப் பின்வரும் சனிக்கிழமையோடு முடிவுபெறும்.

சூரியனுடைய ஸ்தானத்தைநோக்கி வருஷம் ஆறு பருவங்களாகப் பகுக்கப்பட்டிருப்பதுபோல, இந்தத் தேவ ஆராதனையின் காலமும் நித்திய சூரியனாகிய சேசுகிறீஸ்துவின் ஜீவிய பரமஇரகசியங்களுக்கு ஏற்றவாறு ஆறு பருவங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்பருவங்களாவன: ஆகமனகாலம், கிறீஸ்து பிறப்பின்காலம், சப்தரிகைகாலம், தபசுகாலம், பாஸ்குகாலம், இஸ்பிரீத்துசாந்து திருநாட்காலம் என்பன. இப்பெரிய சக்கரத்தினுள் சிறிய சக்கரம் ஒன்றுண்டு; இது அர்ச்சிஷ்டவர்கள் திருநாட்களின் காலச் சக்கரம்.

## I கிறீஸ்துவின் பரம இரகசியங்களின் காலச் சக்கரம்

இக்காலச் சக்கரம் இரு பிரிவுகளை உடையது: கிறீஸ்து பிறப்பின் திருநாள், பாஸ்குத் திருநாள். இவ்விரண்டு விழாக்களில் ஒவ்வொன்றுக்கும் மூன்று காலங்கள் உண்டு. (1) ஆயத்த காலம், (2) அநுசரிப்புக் காலம், (3) அதன் நீட்டிப்புக் காலம். நம் ஆத்துமம் இவ்விரு பெரிய திருநாட்களுக்குத் தக்கவிதமாய் ஆயத்தஞ் செய்யவும், திருநாட்களைப் பக்தியோடு கொண்டாடவும், அதன் பிறகு சில வாரங்கள் அவற்றின் பயனை அனுபவிக்கவும் இக்காலங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

### A. கிறீஸ்து பிறப்பையொட்டிய காலம் :<br>கிறீஸ்துவின் மனிதாவதாரத்தின் பரம இரகசியங்கள்

1. ஆயத்தம்: **ஆகமன காலம்:** பிதாப்பிதாக்களோடும் தீர்க்கத்தரிசிகளோடும் சேர்ந்து நாம் நான்கு வாரங்கள் ஆண்டவரின் வருகைக்குக் காத்திருக்கிறோம்.

2. அநுசரிப்பு: **கிறீஸ்து பிறப்பு:** தெய்வ வார்த்தையானவர் மாமிசமானதும், நம் ஆத்துமத்தில் ஞானவிதமாய்ப் பிறப்பதும், நம் ஞானக்கண் முன் கொண்டுவரப்படுகின்றன.

3. நீட்டிப்பு: **மூன்று இராஜாக்கள் திருநாளும், அதற்குப் பின்வரும் காலமும்:** இக்காலம் ஆறு வாரங்கள் நீடிக்கலாம். நசரேத் ஊரில் கிறீஸ்துவின் மறைந்த ஜீவியத்தை இது நமக்கு நினைவுறுத்துகின்றது.

# செய்திகள்

## ★ திருச்சிலுவை குருமடத்தில் குருப்பட்டம் !



கடந்த டிசம்பர் மாதம் 27–ம் நாள், ஆஸ்திரேலியாவில் உள்ள அர்ச். 10–ம் பத்திநாதர் குருக்கள் சபையின் திருச்சிலுவை குருமடத்தில் ஒரு குருமாணவர் குருப்பட்டமும், 3 குருமாணவர்கள் தியாக்கோன் பட்டமும் பெற்றார்கள். தியாக்கோன் பட்டம் பெற்றவர் களில் மும்பையைச் சேர்ந்த கிரகோரி நரோணா என்பவரும் அடங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. வருகிற டிசம்பர் மாதம் (2008–ல்) இவர் குருப்பட்டம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவருக்காக நாம் ஜெபிப்போம். - **Southern Sentinel.**

## ★ சேசு சபையின் இன்றைய நிலை குறித்து கர்தினால் கவலை !

சேசு சபையின் 35–வது பொது சபை கூட்டம் இம்மாதம் (ஜனவரி) 7–ம் நாள் முதல் உரோமையில் கூடுகிறது. தற்போதைய சிரேஷ்டர் தனது ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளும்படி இக்கூட்டத்தில் கேட்கவிருக்கிறார். ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டால் (**Black Pope** என்று அழைக்கப்படும்) புதிய சிரேஷ்டர் தேர்தெடுக்கப்படலாம்.

இப்பொதுசபை கூட்டத்தை தொடங்கி வைத்து ஒப்புக்கொடுத்த பூசையில், அப்போஸ்தலிக்க வாழ்வை கொண்டிருக்கும் சபைகள் மற்றும் துறவற சபைகளைக் கவனிக்கும் கர்தினால் பிராங்க் ரோடே (**Franc Rodé**) தனது மறையுரையில் சேசு சபையின் இன்றைய நிலையை குறித்து தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டார்.

மறையுரையில் அவர் கூறியதாவது: 'ஆண்டவருக்கும், அவரது பத்தினியாகிய திருச்சபைக்கும், பாப்பானவருக்கும் சேவை செய்வோம்' என்ற சேசு சபையின் தாரக மந்திரத்தை சரியாக பின்பற்றாமலும், "**sentire cum Ecclesiae**" அதாவது "திருச்சபையின் சிந்தனையைக் கொண்டிருப்பது" என்ற மனநிலை குறைந்தவர்களாயும் இருக்கிறார்கள் என்று வருத்தத்துடன் கூறினார். திருச்சபையின் அதிகார வர்க்கத்தை (**Hierarchy**) மதியாமல் அதைவிட்டு தூர செல்வது வருத்தத்தை வருவிக்கிறது என்றார்.

மேலும், வேதாகமத்திலும் பாரம்பரியத்திலும் தரப்பட்டுள்ள பொது வெளிப்பாட்டை (**Public Revelation**) உலகிற்கு தருவது மிகவும் அவசியம். தங்களுடைய அழைத்தலினாலும், அப்போஸ்தலிக்க அலுவலினாலும் உண்மையின் இராஜ்ஜியத்தை, சிநேகத்தின் இராஜ்ஜியத்தை அறிவிக்க, போதிக்க கடமையுள்ளவர்கள், தங்களுடைய முரண்பாடான போதனைகளினாலும், கருத்துக்களினாலும் விசுவாசிகள் திசைமாறிப் போகச் செய்கிறார்கள்... ஆகவே உங்களுடைய சபை ஒழுங்குகளுக்கு ஏற்ப சபையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பத்திரிகைகள், வெளியீடுகளை கண்காணித்து திருச்சபையின் சிந்தனைக்கு அவைகள் ஒத்திருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். **- dici.org**

## ★ முத்திப்பேறு பட்டம் வழங்குவது பற்றி பாப்பானவரின் விருப்பம் !

கத். திருச்சபையின் முத்திப்பேறு பட்டம் பெறக்கூடியவர்களின் பட்டியலை அதிக கவனத்துடனும், கண்டிப்புடனும் விசாரித்து ஆராய வேண்டும் என்று புனிதர் பட்டம் சம்பந்தமான சங்கத்தின் தலைவர் ஜோஸே மார்ட்டின்ஸ் மேற்றிராசன ஆயர்களிடம் கேட்டுக்கொண்டார். இது சம்பந்தமாக 20 பக்க அளவிலான ஆலோசனைகள் ஆயர்களுக்கு அனுப்பப்பட இருக்கிறது.

பாப்பானவர் 16–ம் ஆசீர்வாதப்பர் தனது ஆட்சி காலத்தின் தொடக்கத்திலேயே, முத்திப்பேறு பட்டமானது இனிமேல் முன்பு போல அவரவர் (முத்திப்பேறு பட்டம் பெற இருப்பவர்) மேற்றிராசனத்திலேயே வைத்து கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருந்தார்.

**குழந்தை சேசுவின் தெரசம்மாளின் பெற்றோர்களுக்கு விரைவில் முத்திப்பேறு பட்டம் !**

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு,
பாளையங்கோட்டை - 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை, முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்,
லூர்து மாதா தெரு,
தளவாய்புரம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88 B, வெற்றிவேல்புரம் (முருகன் தியேட்டர் அருகில்),
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிப்பள்ளம், கன்னியாகுமரி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2586201

**திருச்சி:**
No-7, ஜவஹர் தெரு,
15-வது குறுக்குச்சாலை, குமரன் நகர்,
திருச்சி - 17.
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்,
சின்னமலை,
சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044 - 22355389.

## MASS CENTRES IN OTHER STATES

**BOMBAY / BANDRA (MH) :**
Pioneer Hall, St. Johh Baptist Road,
After Mount Carmel Church,
Bandra (W).
Tel: 022 - 28079680.

**BOMBAY / MALAD (MH) :**
Gratias Mariae Building,
Tank Road, Next to Orlem Church,
Malad.
Tel: 022 - 28079680.

**BOMBAY / VASAI (MH) :**
St. Gonsalo Garcia Orphanage,
Bassein Fort,
Vasai.

**BANGALORE :**
Mr. Benny Joseph.
Tel: 09448067670.

**GOA :**
Salvador Do Mundo,
Opp: Bus Stand, Benaulim,
Rio Sal Estates,
22, Duplex Apts.
Goa.

**DELHI & DUBAI :**
Contact: Society of St. Pius X,
Palayamkottai,
Tirunelveli – 627 002.


## Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com